www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**பள்ளிக் கல்வித் துறை – விழுப்புரம் மாவட்டம்**

**காலாண்டுத்தேர்வு (செப்டம்பர்–2024)**

**வகுப்பு : 12 வணிகவியல் விடை குறிப்பு மதிப்பெண்: 90**

**I. அனைத்து வினாக்களுக்கும் பதிலளிக்கவும்:– (20 × 1 = 20)**

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:–**

| | |
|---|---|
| 1. ஆ) iv iii i ii | 11. ஆ)கண்ணுக்கு புலனாகா |
| 2. ஈ)கட்டுப்படுத்துதல் | 12. ஆ) புற வளங்கள் |
| 3. ஈ) அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது | 13. ஆ) உளவியல் சோதனை |
| 4. ஈ) பல முறை | 14. அ) பயிற்சி |
| 5. ஆ) 1992 | 15. ஆ) சந்தையிடுகையாளர் |
| 6. ஆ) வைப்புச் சான்றிதழ் | 16. இ) பண்டமாற்று முறை |
| 7. அ) வணிக வங்கி | 17. அ) கல்வி |
| 8. ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக | 18. (அ) வாடிக்கையாளரிடமிருந்து வாங்குபவராக |
| 9. அ) கலைமான் ஊக வணிகர் முனைம வேட்டையாளர் என்று அழைக்கப்படுகிறார். | 19. (இ)1930 |
| 10. இ) டிசம்பர் 1996 | 20. (இ) நுகரும் உரிமை |

**II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு பதிலளிக்கவும். (வினா எண்: 30 கட்டாயமாக பதிலளிக்கவும்): (7× 2 =14)**

| | | |
|---|---|---|
| 21 | ஒரு உயர் அலுவலரால் எத்தனை பணியாளர்களை சிறந்த முறையில் மேற்பார்வை செய்ய முடியும் என்ற அளவே மேற்பார்வை வீச்செல்லை எனப்படும். | 2 |
| 22 | முக்கிய முடிவு பகுதிகள் ஒரு அமைப்பின் வலிமையை குறிக்கிறது .<br>இலாபம், சந்தை நிலவரம், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவை முக்கிய முடிவு பகுதிகளுக்கு உதாரணம் ஆகும். | 2 |
| 23 | . i) கட்டுப்பாட்டளர்கள் ii)நிதி நிறுவனங்கள் iii)நிதி சந்தை iv)நிதிசார் சேவைகள் | 2 |
| 24. | பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI ஆகும். | 2 |
| 25 | பங்கு மாற்றகம் (பங்குச் சந்தை) என்பது வாங்குபவர் மற்றும் விற்பவர் ஒரு இடத்தில் கூடி அனைத்து வகையான பத்திரங்கள் பங்குகளை கையாளும் ஒரு இடமே ஆகும். | 2 |
| 26. | பங்குச்சந்தைகளை ஒழுங்குபடுத்துவது.<br>முதலீட்டாளர்களின் நலன்களை பாதுகாப்பது. | **ஏதேனும் 2** |
| 27. | உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனிதவளம் திகழ்கிறது.<br>மனித வளமானது ஒரு குழுவாக செயல்படலாம். | **ஏதேனும் 2** |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| 28 | பொருத்தமான வேலைக்கு பொருத்தமான விண்ணப்பதாரரை தேர்ந்தெடுத்து பணிவழங்கும் செயல்முறை பணியமர்த்தல் ஆகும். | 2 |
| 29. | நுகர்வோர் வாங்கிய பொருட்கள் அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வில்லை அல்லது குறைபாடு உடையவை எனில் அதற்கு பொருட்களை விற்றவர் எந்த வகையிலும் பொறுப்பாக மாட்டார்.<br>பொருட்களை வாங்கியவர் அதற்கு நிவாரணம் தேட இயலாது, என நுகர்வோரை எச்சரிக்கை செய்யும் தத்துவமே வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு எனும் கோட்பாடு ஆகும். | 2 |
| 30 | i) சமூக சந்தை ii) தனியிடச் சந்தை | 2 |

**III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு பதிலளிக்கவும்.(வினா எண்:40 கட்டாயமாக பதிலளிக்கவும்):**
**(7× 3 = 21)**

31.

| அடிப்படை | மேலாண்மை | நிர்வாகம் |
|---|---|---|
| i)அதிகாரம் | மத்திய மற்றும் கீழ்மட்ட அளவில். | உயர்மட்ட அளவில். |
| ii)பங்கு | நிறைவேற்றம். | முடிவெடுத்தல். |
| iii)முக்கிய நபர் | மேலாளர். | நிர்வாகி. |

ஏதேனும் 3
3×1=3

| | |
|---|---|
| 32. என்ன வேலை செய்யப்பட வேண்டும்? அது எங்கே செய்யப்பட வேண்டும்? அது எவ்வாறு செய்யப்பட வேண்டும்? அது எப்போது செய்யப்பட வேண்டும்?<br>இவை போன்ற விபரங்கள் சுற்றறிக்கைகள், கையேடுகள், செய்திமடல்கள், அறிவிப்பு பலகைகள், கூட்டங்கள், பங்கேற்பு இயக்கம், ஆகியவற்றின் மூலமாக பணியாளர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றன. | 3 |
| 33. ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலை சந்தை ஆகும்.<br>முதல்நிலைச் சந்தையில் வெளியீடு செய்யப்பட பங்குகள் இங்கு வணிகம் செய்யப்படுகிறது.<br>இதில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும். | 3 |
| 34. ) i) **ஏட்டுகடன் தரகு முகமை:** ஏட்டுக்கடன் தரகு முகமை அதனுடைய வாடிக்கையாளர்களுக்காக ஏட்டுக்கடன்களை வசூலிக்கும்.<br>ii) **துணிகர நிதி நிறுவனம்:** இது சாதாரண நிதியின் ஒரு பகுதி. இது புதிய திட்டம் அல்லது கண்டுப்பிடிப்புக்காக நிதி வழங்க உருவாக்கப்பட்டது. இது நவீன தொழில் நுட்ப வளர்ச்சிக்கு உதவுகிறது. | 1 1/2<br>1 1/2 |
| 35. i) **காளை:** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்கின்ற ஊக வணிகர் காளை ஊக வணிகர் ஆவர்.<br>இவர் தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார்.<br>இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் மனப்பாங்கு கொண்டவர். | 1 1/2 |

| | |
|---|---|
| **ii) கரடி:** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர் கரடி ஊக வணிகர் ஆவர்.<br>இவர் மண்டிவாலா என்று அழைக்கபடுகிறார்.<br>இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர். | 1 1/2 |
| **36.** நிறுவனங்கள் காலிப்பணியிடங்கள் குறித்து எவ்வித அறிவிப்பும் செய்யாத நிலையில் வேலை தேடுபவர் தாமாக வேலை வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பங்கள் கோரப்படாத விண்ணப்பங்கள் ஆகும். நிறுவனங்கள், காலிப்பணியிடம் ஏற்படும்போது இந்த விண்ணப்பம் செய்த நபர்களை பயன்படுத்திக்கொள்ளலாம். | 3 |
| **37.** உண்மையான வேலை சூழலை செயற்கையாக உருவாக்கி அங்கு வைத்து அளிக்கப்படும் பயிற்சி தொழிற்சாலைகளுக்குள் பயிற்சி ஆகும். இதனால் தொழிற்சாலையில் உள்ள பொருட்களுக்கு எவ்வித சேதாரமும் ஏற்படுவதில்லை.<br>விமானிகளுக்கு இவ்விதமாக பயிற்சி அளிக்கப்படுகிறது. | 3 |
| **38. i) என்ன விற்பனை செய்ய இயலும்?**<br>என்ன விற்பனை செய்ய இயலும் என்பதை முடிவு செய். ஆனால் எதை நீ உற்பத்தி செய்தாயோ அதை விற்பனை செய்ய முயற்சிக்காதே.<br>**ii) முதலில் பொருட்களை உற்பத்தி செய்யலாமா?**<br>இல்லை முதலில் வாடிக்கையாளரை உருவாக்கு. அதன் பிறகு பொருட்களை உருவாக்கு.<br>**iii) எனது பொருட்கள் மீது அன்பு செலுத்தலாமா?**<br>இல்லை உனது வாடிக்கையாளர் மீது அன்பு செலுத்து. ஆனால் பொருட்களின் மீது அல்ல.<br>**iv) சந்தையில் யார் மேம்பட்டவர்?**<br>நுகர்வோரே மேம்பட்டவர். அவர்கள் மன்னர் போன்றவர்கள்.<br>**v) யார் எனது முடிவினை வடிவமைப்பவர்?**<br>வாடிக்கையாளரின் முன்னுரிமையே உனது முடிவினை வடிவமைக்கும். | 3 |
| **39.** பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய காலத்திற்குள் இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.<br>நுகர்வோரின் புகார்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் கோரிக்கைகளை உடனடியாக சரி செய்ய வேண்டும்.<br>இதனால் நுகர்வோரின் நம்பிக்கை அதிகரிக்கும் மற்றும் வாங்குபவர்களுக்கும் நியாயம் கிடைக்கும்.<br>ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் உண்மையான புகார்களுக்கு நியாயமான மற்றும் உறுதியான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். | 3 |
| **40. (i) செயற்கைப் பற்றாக்குறை**<br>**(ii)** விற்பனையாளர்கள் தேவைக்கு அதிகமான அளவு பொருட்களை இருப்பில் வைத்துக் கொண்டே இல்லை என பொய் கூறுவது செயற்கை பற்றாக்குறை ஆகும். | 1<br>2 |

**IV. அனைத்து வினாக்களுக்கும் பதிலளிக்கவும்:–** (7 × 5 = 35)

| | |
|---|---|
| **41.** (ஏதேனும் 5 சிறு விளக்கத்துடன்)) | 5×1=5 |

| | |
|---|---|
| **(அ)** i.அறிவின் தொகுப்பு ii.மேலாண்மைக் கருவிகள்: iii.தனிப்பாடப் பிரிவு: iv.சிறப்பீடுபாடு v.நடத்தை விதி vi) பணிரீதியானதொரு அமைப்பு<br>(அல்லது)<br>(ஆ) i)அதிக விலைக்கு விற்றல் ii)கலப்படம் iii) போலியான பொருட்கள் iv)செயற்கை பற்றாக்குறை v) தரக்குறைவு vi)இடர்பாடு கொண்ட பொருட்கள் vii)உத்தரவாதம் மற்றும் சேவைகள் viii)தகுதியற்ற பொருட்கள் ix) பொய் விளம்பரங்கள் | **(தலைப்புகள் மட்டும் இருந்தால் 1 மதிப்பெண்)** |
| **42.(அ) I.மேலாண்மையின் பல்வேறுப் பணிகள் (ஏதேனும் 5 சிறு விளக்கத்துடன்))**<br>i) திட்டமிடல் ii) பணியமர்த்தல் iii) கட்டுப்படுத்துதல் iv) ஒருங்கிணைத்தல் v) செயலூக்கமளித்தல் vi)இயக்குவித்தல் vii)ஒருங்கிணைத்தல் viii)பிரதிநிதித்துவம் ix)முடிவெடுத்தல் x)புதுமைப்படுத்துதல்<br>xi)தகவல் தொடர்பு<br>(அல்லது)<br>(ஆ) **அ)முறையான சந்தை (அல்லது) செம்மையான சந்தை :**<br>இவ்வகை சந்தையில் ஒரே தன்மை கொண்ட பொருட்கள் மற்றும் சேவைகள் ஒரே விதமான விலையின் அடிப்படையில் விற்பனை செய்யப்படுகிறது.<br>**முறையான சந்தைக்கான நிபந்தனைகள்:**<br>பொருள்களின் விலை ஒரே சீராக இருக்க வேண்டும்.<br>வாங்குவோர் மற்றும் விற்பவர் அதிகமாக இருக்கவேண்டும் .<br>வாங்குவோர் மற்றும் விற்போர் சந்தை பற்றி தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.<br>**ஆ)முறையற்ற (அல்லது) செம்மையற்ற சந்தை :**<br>இவ்வகை சந்தையில் பல வகை பொருட்கள் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.<br>**முறையற்ற சந்தையின் செயல்பாடுகள்:**<br>பொருட்கள் ஒரே தன்மை உடையதாக இருக்காது.<br>விலையில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும்.<br>தகவல் தொடர்பில் குறைபாடு இருக்கும். | 5×1=5<br>**(தலைப்புகள் மட்டும் இருந்தால் 1 மதிப்பெண்)**<br><br>2 1/2<br><br>2 1/2 |
| **43. (அ) 1.** மேலாளர்களின் நேரத்தை சேமிக்கிறது.<br>2. முக்கியப் பிரச்சனைகளை நிர்வகிப்பதில் கவனங்களைச் செலுத்துகிறது.<br>3. அதிகார பகிர்வினை எளிமையாக்குகிறது.<br>4. இது கீழ்நிலை ஊழியர்களை ஊக்குவித்து வளர்ச்சியடைய வழிவகுக்கிறது.<br>5. முடிவுகளை நிர்ணயிக்கும் சிறந்த அளவுகோலாக விளங்குகிறது.<br>6. முக்கியமில்லாத தகவல்களில் இருந்து முக்கியமான தகவல்களை பிரிக்க உதவுகிறது.<br>(அல்லது)<br>(ஆ) **i)பொருள்:** பொருள் சந்தையில் ஒரு முக்கிய கூறு ஆகும். பொருள் இல்லை எனில் எந்த ஒரு சந்தையும் இயங்க முடியாது<br>**ii)விலை** :விலை என்பது பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பாக பெறப்படும் ஒன்றாகும். | 5×1=5<br>(ஏதேனும் 5)<br><br>5 |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| | |
|---|---|
| **iii)இடம்:** பொருட்களை உற்பத்தி செய்யும் இடத்திலிருந்து நுகர்வோர் இருக்கும் இடம் வரை சரியான முறையில் மற்றும் சரியான நேரத்தில் கொண்டு செல்ல வேண்டும். இதற்கு இடம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.<br>**iv)விற்பனை மேம்பாடு**:நுகர்வோர் மத்தியில் பொருளின் சிறப்பு இயல்புகள் மற்றும் பயன்பாடு குறித்து தெரியப்படுத்தினால் தான் நிர்ணயித்த வெற்றியை பெற முடியும் .இதற்கு விளம்பரம் பெரிதும் உதவி செய்கிறது. | |
| **44. (அ) i)**போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலனைப் பாதுகாக்கிறது.<br>ii) பங்குச் சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுபடுத்துகிறது.<br>iii) பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.<br>iv) நிதி இடைத்தரகர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளிக்கிறது<br>v) மத்திய அரசால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துகிறது.<br>vi) இடைத்தரகர்களின் மோசடி மற்றும் நியாயமற்ற முறைகளை தடைசெய்கிறது.<br>vii)மூலதன வெளியிட்டு ஈடுபட்டிருக்கும் தொழில் நிறுவனங்களுக்கு செபி வழிகாட்டுதல்கள் மற்றும் வழிமுறைகளை வெளியிடுகிறது.<br>viii) முதலீட்டாளர்களின் நலன்களை பாதுகாப்பதற்கான ஒரு வழியாக நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் கையகப்படுத்துவர்களை கையகப்படுத்தல்களை செபி ஒழுங்குபடுத்துகிறது.<br>ix) பரஸ்பர நிதியங்கள் போன்ற முதலீட்டு திட்டங்களின் செயல்பாட்டை பதிவு செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் பணிகளை மேற்கொள்கிறது.<br>x) இடைத்தரகர்களின் சுய ஒழுங்குமுறை அமைப்பை ஒழுங்குப்படுத்துதல், விரிவான சட்ட அதிகாரங்களை கொண்டுள்ளது மூலதனச் சந்தையை மேம்படுத்துவதற்கான அணுகுமுறையை வளர்த்துக் கொள்வதற்காக படிகளை மேற்கொள்கிறது.<br>xi) நிதி இடைத்தரகர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளித்தல்.<br>xii) இந்திய மத்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துதல்<br>(அல்லது)<br>(ஆ) | 5×1=5<br>(ஏதேனும் 5)<br><br>5×1=5<br>(ஏதேனும் 5) |

| NO | அடிப்படை | பணிவழி பயிற்சி | பணிவழியற்ற பயிற்சி |
|---|---|---|---|
| i) | விளக்கம் | வேலை சூழலில் வேலையை புரிந்து கொள்கிறார். | பணிச் சூழலுக்கு வெளியே பயிற்சியை பெறுகிறார். |
| ii) | செலவு | செலவு குறைவு | செலவு அதிகம் |
| iii) | இடம் | வேலை இடத்திலேயே பயிற்சி பெறுகிறார் | வேலை இடத்திற்கு வெளியே பயிற்சி பெறுகிறார் |
| iv) | கோட்பாடு | நிறைவேற்றல் மூலம் கற்றல். | அறிவை பெறுவதன் மூலம் கற்றல். |
| v) | கற்றல் | அறிவை பெறுதல் | அனுபவத்தின் மூலம் |

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | | | |
|---|---|---|---|---|
| | | மூலம் கற்றல் | கற்றல் | |
| vi) | அணுகுமறை | நடைமுறை அணுகுமுறை | கோட்பாடு அணுகுமுறை | |

45.(அ) 5×1=5 (ஏதேனும் 5)

| **தன்மைகள்** | **பணச்சந்தை** | **மூலதனசந்தை** |
|---|---|---|
| நிதியின் காலம் | குறுகியகால நிதிகளுக்கான . | நீண்ட கால நிதிகளுக்கான சந்தை ஆகும். |
| இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைவாக உள்ளது. | கடன் மற்றும் சந்தை ஆபத்து அதிகளவு உள்ளது. |
| ஆதிக்கநிறுவனங்கள் | வணிக வங்கிகள் | வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் |
| பணமதிப்பு | ஆவணங்கள் அதிக மதிப்புடையவை. | ஆவணங்கள் சிறிய மதிப்புடையவை . |
| ஒப்புறுதி அளித்தல் | ஒப்புறுதியளித்தல் முதன்மைப் பணி அல்ல. | ஒப்புறுதி அளித்தல் முதன்மை பணி ஆகும். |
| ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மையவங்கி | மையவங்கி,செபி போன்ற அமைப்புகள். |

**(அல்லது)**

**45. (ஆ) i) இடமாற்றம்:** ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்கள் பற்றாக்குறை உள்ள மற்ற துறைகளுக்கு மாற்றப்படுகின்றனர். இதன் மூலம் காலிப்பணியிடங்களை நிரப்பலாம். 5×1=5 (ஏதேனும் 5)

**ii)பதவி உயர்வு:** பணிமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில் பணியாளர்களுக்கு நிறுவனத்தின் கீழ்மட்ட நிலையிலிருந்து மேல்மட்ட நிலைக்கு சென்று பணிபுரிய அளிக்கப்படும் வாய்ப்பு பதவி உயர்வு ஆகும்

**iii)பழைய ஊழியர்களின் பரிந்துரை:** பழைய பணியாளர்களை திருப்பதிபடுத்த அவர்களது உறவினர்கள் அல்லது நண்பர்களை வேலைக்கு அமர்த்தலாம்.

**iv)தக்கவைத்தல்:** ஓய்வு பெறும் பணியாளர்களை நிறுவனத்தின் தேவைக்கேற்ப பயன்படுத்தி கொள்ளலாம்.

**v)ஓய்வு பெற்ற ஊழியர்கள்:** போதிய தகுதி மற்றும் போதிய அனுபவம் கொண்ட ஓய்வுபெற்ற பணியாளர்களை கொண்டு நிறுவனத்தின் காலிப்பணியிடங்களை நிரப்பலாம்.

**46. (அ)** 5×1=5

**i) உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:**

ஒரு முதலீட்டாளர் பத்திரங்களை பங்குச் சந்தைகளில் எளிதில் வாங்கவும் விற்கவும் முடியும்.

பத்திரங்களின் இந்த எளிமையான விற்பனைத் திறன் அவர்களின்

www.Padasalai.Net

பணப்புழக்கத்தை அதிகரிக்கிறது.

**ii)பத்திரங்கள் சரியான மதிப்பீடு:**

பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலைகள் பதிவு செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**iii)முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:**

பங்குச் சந்தையில் நன்கு வரையறுக்கப்பட்ட விதிகள் உள்ளதால் முதலீட்டளர்களின் நலன் பாதுகாக்கபடுகிறது.

**iv)மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:**

மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக்கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்வதால் இலாபம் ஈட்ட முடிகிறது

**v)மூலதன உருவாக்கத்திற்கான உதவி:**

பங்குகள் விற்பனை மூலம் நிறுவனங்ககளுக்கு தேவையான மூலதனம் கிடைப்பதால் தொழில்துறை வளர்ச்சி அடைகிறது.

**(அல்லது)** 5×1=5

**ஆ** (ஏதேனும் 5)

| அடிப்படை | ஆள்சேர்ப்பு | தேர்ந்தெடுத்தல் |
|---|---|---|
| பொருள். | பணியாளர்களை தேடும் மற்றும் வேலைக்கு விண்ணப்பிக்க தூண்டும் செயல் | பொருத்தமான வேலைக்கு பொருத்தமான நபரை தேர்ந்தெடுத்தல். |
| அணுகுமுறை. | நேர்மறையானது . | எதிர்மறையானது. |
| வரிசை. | முதல் படி. | இரண்டாம் படி. |
| முறை. | சிக்கனமானது. | செலவு மிகுதியானது. |
| செயல்முறை. | எளிதானது . | சிக்கலானது. |
| காலம். | குறைவான காலம் . | அதிக காலம். |
| ஒப்பந்த உறவு. | ஒப்பந்த உறவு இல்லை. | முதலாளி, பணியாளர் உறவு உண்டு. |

**47. (அ) (ஏதேனும் 5) சிறு விளக்கத்துடன்** 5×1=5

**i)தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்குதல்:**

**ii)பொருட்களை வாங்குவதற்கு முன் அதன் எடையையும் மற்றும் அளவையும் உறுதிப்படுத்துதல்:**

**. iii)விவர அட்டையை கவனமாகப் படித்தல்:**

**. iv) தவறான மற்றும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையுடன் இருத்தல்:**

**v) ரொக்க ரசீதை உறுதி செய்தல்:**

பொருட்களை வாங்கும்பொழுது ரொக்க ரசீது மற்றும் உத்தரவாத அட்டைகள் போன்றவற்றை பெறுவது நுகர்வோரின் சட்டப்படியான கடமையாகும்.

Vi) புகழ்மிக்க கடைகளில் இருந்து பொருட்களை வாங்குதல்

| | |
|---|---|
| Vii) கள்ளச் சந்தைகளில் ஒருபோதும் பொருட்களை கொள்முதல் செய்யாமை.<br>Viii) தரமான பொருட்களை வாங்குதல்.<br>IX)உற்பத்தியாளர்களின் அறிவுறுத்தல்களை பின்பற்றுதல்.<br>X) நுகர்வோரின் உரிமைகள் பற்றிய அறிவு .<br>**(அல்லது)** | |
| **ஆ) 1.** உற்பத்தி செய்யும் ஒரே காரணியாக மனிதவளம் திகழ்கிறது.<br>2. பிற அனைத்து வளங்களையும் மனித வளம் உருவாக்குகிறது.<br>3. மனித வளங்களின் நடத்தைகளை ஊகிக்க முடிகிறது.<br>4. மனித வளங்கள் உணர்ச்சி பூர்வமானவை.<br>5. மனித வளங்கள் நகரும் தன்மை கொண்டது.<br>6.பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கொண்டதே தவிர மனித வளம் என்பது பணியாளர் அல்ல.<br>7.மனித வளமானது கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.<br>8.நிதியுடன் அல்லது நிதியில்லாமலும் மனித வளம் ஊக்குவிக்கப்படலாம்.<br>9.மனித வளம் ஒரு குழுவாக செயல்படலாம்.<br>10.மனித வளங்களால் உண்டாகும் மதிப்பு மற்றும் பாராட்டுக்கள் நீண்ட காலத்திற்கு கிடைக்கிறது. | **5×1=5**<br>**(ஏதேனும் 5)** |

www.Padasalai.Net